# உள்ளூராட்சி ஆணையாளருக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் உரிய அதிகாரங்களும் பணிப்பொறுப்புகளும்

DRAFT

*ஆசியா நிலையம்*

Australian Aid

The Asia Foundation

பிரசுரிக்கப்பட்டது:

*ஆசியா நிலையம்*, இலங்கை

முதலாம் பதிப்பு.
© 2018, *ஆசியா நிலையம்*

ISBN:

நூலாசிரியர்:
எச். ஜீ. சி. ஜயதிஸ்ஸ
ஆலோசகர் (சட்டம் மற்றும் உள்ளூராட்சி)

அச்சிடப்பட்டது:
கொழும்பு, இலங்கை

இவ் வெளியீடு பற்றி: இவ் வெளியீடு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் *ஆசியா நிலையம்* மூலம் நடைமுறைப்படுத்தப்படும் உப தேசிய ஆளுகைத் திட்டத்தின் (SNGP) கீழ் உருவாக்கப்பட்ட தொடர் அறிவுசார் படைப்புக்களின் ஒரு பகுதியாகும். உப தேசிய ஆளுகைத் திட்டமானது இலங்கையின் உப தேசிய நிர்வாகத்தை முன்னேற்றுவதற்கான மீளெழுச்சி, பிரஜைகள் உள்ளடக்கமும் பிரதிநிதித்துவமும் மற்றும் பிரச்சினைகளுக்கு நிவாரணமளித்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சோதனை மாதிரிகளின் நிறுவனமயமாக்கல் பற்றிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் சோதனைச் சீர்திருத்த வழிமுறைகள், செயல்முறைகள், கருவிகள் மற்றும் பிரதான அலுவலர்களின் திறனை கட்டியெழுப்பல் ஊடாக இலங்கையின் உப தேசிய ஆளுகைச் சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதற்காகவும் செயற்பட்டு வருகின்றது.

பொறுப்புக் கூறல்: இந்த வெளியீட்டில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் யாவும் நூலாசிரியரின் கருத்துக்களேயன்றி அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கருத்துக்கள் அல்ல.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | **ஆசியா நிலையம்** | |
| | உப தேசிய ஆளுகைத் திட்டம் | |
| | அறிமுகம் | |
| **01.** | உள்ளூராட்சித் திணைக்களத்தின் வரலாறும் வளர்ச்சியும் ........................................................... | **7** |
| **02.** | உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளின் தத்துவங்களும் கடமைகளும் ................................. | **8** |
| 03. | உள்ளூராட்சித் திணைக்கள தலைமை நிருவாகிகளும் உப தலைமை நிருவாகிகளும் தமக்குரிய தத்துவங்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியம் ............................................................. | **9** |
| **04.** | உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பணிப்பொறுப்புக்களும் .................. | **9** |
| **4.1** | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும் ................................. | **9-10** |
| **4.2** | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும் ...................................... | **11-14** |
| **4.3** | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும் ................... | **14-17** |
| **4.4** | 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் ................ | **17** |
| **05.** | உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அதிகாரங்களும் பொறுப்புக்களும் ........................ | **17** |
| **5.1** | 255ஆம் அத்தியாயமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் .................................... | **17-18** |
| **5.2** | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க **பிரதேச** சபைகள் சட்டத்தின் கீழ் உதவி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும் .................. | **18-20** |


DRAFT

## ***ஆசியா நிலையம்***

ஆசியா *நிலையமானது* ஆசியா வாழ் மக்களின் வாழ்வினையும் ஆசியாவின் அபிவிருத்தியினையும் மேம்படுத்தும் பிரயத்தனத்துடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஓர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமாகும். அறுபது ஆண்டுகால அனுபவம் மற்றும் ஆழ்ந்த உள்ளூர் நிபுணத்துவத்துடன் எமது பிராந்தியத்திற்கான பணியானது பின்வரும் 5 மையக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆவையாவன, உள்ளூராட்சியை வலுவாக்கல், மகளிர் வலுவூட்டல், பொருளாதார விரிவாக்கல் வாய்ப்புக்கள், சூழலுக்கேற்ற நெகிழ்வுத்தன்மையை அதிகரித்தல் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

சேன். பிரான்சிஸ்கோவை (St. Franscisco) தலைமையகமாகக் கொண்டு 18 ஆசிய நாடுகளிலும் ஆசியா *நிலையமானது* ஒரு வலையமைப்பாகத் தொழிற்படுகிறது. ஆசியா *நிலையமானது* அபிவிருத்தியடைந்த பலதரப்பு மற்றும் இருதரப்பு முகவர்கள், அமைப்புக்கள், நிறுவனங்கள் மற்றும் தனியாட்கள் மூலமாக நன்கொடைகளைப் பெற்று பொதுமக்களுடனும் தனியார் பங்குதாரர்களுடனும் தனது அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. 2017 இல், நாம் 83.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிகழ்ச்சிகளுக்கு நேரடி அனுசரணையாகவும் 8.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை பாடநூல் மற்றும் ஏனைய கல்வி சம்பந்தமான பொருட்களுக்காகவும் வழங்கியுள்ளோம்.

DRAFT

# உப தேசிய ஆளுகைத் திட்டம்

ஆசியா *நிலையத்தின்* உப தேசிய ஆளுகைத்திட்டமானது (SNGP) பொருளாதார வளர்ச்சி மற்றும் செயலாக்கம் வெளிப்படும் இரண்டாம் நிலை நகரங்களின் பொருளாதார மீள்தன்மையினை கட்டியெழுப்புவதற்காக ஆற்றல்மிக்க பொருளாதார மைய எண்ணக்கருத்தின் அடிப்படையில் ஒன்பது *மாகாணங்களினதும்* உள்ளூராட்சி திணைக்களங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நிதி மீள்தன்மை, பிரஜைகள் உள்ளடக்கத்துடன் கூடிய பிரதிநிதித்துவம், மற்றும் பிரச்சினைகள் நிவர்த்திசெய்தல் என்பவற்றிற்கான பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளை வெற்றிகரமான முறையில் நிறுவனமயமாக்கல் மூலம் உப தேசிய ஆளுகைத்திட்டத்தினை இலங்கையில் மேம்படுத்தலினை முக்கிய நோக்கமாக இத்திட்டம் கொண்டுள்ளது.

DRAFT

## அறிமுகம்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டல், ஆலோசனை கூறுதல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல் உட்பட்ட மேற்பார்வைப் பணிகள் மேற்கொள்ளும் பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனங்களுடன் மிக நெருக்கமான அதிகாரிகள் என்ற வகையில் உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் உதவி ஆணையாளர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்குத் தேவையான அதிகாரங்கள் அந்தந்த நிறுவனங்களின் கட்டளைச் சட்டங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், மாகாண மட்டத்தில் உள்ளூராட்சி விடயப் பரப்புடன் சம்பந்தப்பட்ட கீழ்வரும் பணிகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

i. உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தை மேற்பார்வை செய்தல்.
ii. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான மதியுரைச் சேவைகள்
iii. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு நிதி உதவியளித்தல்
iv. உள்ளூராட்சி நிறுவனங்களின் அபிவிருத்திப் பணிகளை மீளாய்வு செய்தல்
v. உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆளணி முகாமைத்துவம்

மேற்படி பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்காக தமக்கு எழுத்திலான சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்பில் விழிப்புணர்வடைதல் மற்றும் அவை பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும், அதிகாரங்களை அமுல்படுத்தும்போது தமக்கு அளிக்கப்படாத அதிகாரங்களை நடைமுறைப்படுத்த முற்படுவதால் அல்லது தவறாக நடைமுறைப்படுத்துவதால் “வரம்பு மீறல்” (Ultra vires) எனும் குற்றத்திற்கு ஆளாகக் **கூடும்**.

ஆகவே, இந்த பணிப்பொறுப்புக்களை உரிய வகையிலும் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் அமுல்படுத்துவதை இலகுவாக்க எழுதப்பட்ட சட்டத்தின் (MCO, UCO & PS Act) பல்வேறு பிரிவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள அதிகாரங்களும் பணிப்பொறுப்புகளும் தனித்தனி பொழிப்பாக இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனவே, உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் உதவி ஆணையாளர்களுக்கும் தாங்கள் சட்டப்படியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் தொடர்பில் அறிந்துகொள்ள இக்கையேடு உதவியாக அமையுமென எதிர்பார்க்கின்றேன்.

**எச் .ஜீ. சீ. ஜயதிஸ்ஸ**
**ஆலோசகர் (சட்டம் மற்றும் உள்ளூராட்சி)**

DRAFT

## 01. உள்ளூராட்சித் திணைக்களத்தின் வரலாறும் வளர்ச்சியும்

உள்ளூராட்சித் திணைக்களத்தின் வரலாற்றையும் அதன் வளர்ச்சியையும் ஆராயும்போது ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில், அதாவது 1931ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட டொனமூர் ஆணைக்குழுவின் சிபாரிசுகள்படி இலங்கையில் உள்ளூராட்சித் திணைக்களம் நிறுவப்பட்டது. டொனமூர் காலத்தின் பின்னர் உள்ளூராட்சித் துறை பரவலாக விஸ்தரிக்கப்பட்டதுடன் மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் என 04 வகையான உள்ளூராட்சி நிறுவனங்கள் நாடு பூராவும் விஸ்தரிக்கப்பட்டன.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஆலோசனை கூறுதல், வழிகாட்டுதல், ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும் பணிகள் உள்ளூராட்சித் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதோடு, உள்ளூராட்சித் திணைக்களத்தின் தலைமை நிருவாகியாக உள்ளூராட்சி ஆணையாளர் பதவி உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் 1946ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க உள்ளூராட்சி **உதவி** ஆணையாளர்களை நியமிப்பதற்கான **சட்டத்தின்** (Local Government – Administrative Regions) மூலம் உள்ளூராட்சி **உதவி** ஆணையாளர்களின் பதவி மேலும் உறுதிப்படுத்தப்பட்டது.

தொடக்க காலத்தில் கொழும்பை மையப்படுத்தியதாக நடைமுறையிலிருந்த உள்ளூராட்சித் திணைக்களம் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பின் உள்ளூராட்சி விடயப் பரப்பு மாகாண சபைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி இன்றளவில் நாட்டிலுள்ள சகல மாகாணங்களும் அடங்கும் வகையில் 09 திணைக்களங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், உள்ளூராட்சி ஆணையாளர்கள் 09 பேரும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களும் நியமிக்கப்பட்டனர். மாகாண மட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்ட உள்ளூராட்சித் திணைக்களமும் உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர்களுக்கு கட்டளைச் சட்டங்களால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் 1989ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## 02. உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகளின் தத்துவங்களும் கடமைகளும்

### பொறுப்புக்கள்

உள்ளூராட்சித் திணைக்களத்தை தாபித்தல் மற்றும் கீழே தரப்பட்டுள்ள நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக பணியாற்றும் பொறுப்பு திணைக்களத்தின் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

i. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவு புகட்டும் பணியாளர் குழாமாக செயற்படுதல்.
ii. நண்பன், நலன்விரும்பி மற்றும் வழிகாட்டி போன்ற மனப்பாங்குகளால் உள்ளூராட்சியை ஊட்டி வளர்க்க உழைத்தல்.
iii. உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
iv. உள்ளூராட்சி நிறுவன கட்டமைப்பின் செயற்பாட்டை மேற்பார்வை செய்தல் மற்றும் செயல் நிறைவேற்றத்தை முன்னேற்ற தகுந்த நடவடிக்கை எடுத்தல்.

### அதிகாரங்கள்

i. உள்ளூராட்சி நிறுவனங்க**ளை ஸ்தாபிக்கின்ற** சட்டமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் நேரடியாக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.
ii. ஆளுநரால் அல்லது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டளைகள் மூலமும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

DRAFT

iii. நிருவாக ரீதியாக மாகாண சபையால் அல்லது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மாவட்டச் செயலாளர் / அல்லது பிற மத்திய அமைச்சுக்களின் செயலாளர்களால் அதிகாரங்கள் அளிக்கப்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன.

**03. உள்ளூராட்சித் திணைக்கள தலைமை நிருவாகிகளும் உப தலைமை நிருவாகிகளும் தமக்குரிய தத்துவங்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியம்**

உள்ளூராட்சி நிறுவனங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல், வழிகாட்டல் மற்றும் மேற்பார்வைக்கு ஏற்பானதாக கீழே காட்டப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் வழிப்புணர்வு பெறுதல் அவசியமாகும்.

i. இலங்கையின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பு
ii. அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகள்
iii. இயற்கை நீதிக் கோட்பாடுகள்
iv. உள்ளூராட்சி நிறுவன ஸ்தாபன சட்டத்தின் கீழ் (MCO, UCO & PS Act.) வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள், கட்டளைகள் மற்றும் துணை விதிகள்

உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பில் எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளருக்குரிய அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**04. உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பணிப்பொறுப்புக்களும்**

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழி காட்டுதல், ஆலோசனை கூறுதல், ஒத்துழைப்பு வழங்குதல் உட்பட்ட பணிப்பொறுப்புக்களுக்கு மேலதிகமாக அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களை ஸ்தாபிக்கும் கட்டளைச் சட்டத்தின் கீழ் பின்வருமாறு காட்டப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புக்களும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ளன.

**4.1 மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும்**

**மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்**

சட்டத்தால் உள்ளூராட்சி ஆணையாளருக்கு மிகவும் குறைந்தளவான அதிகாரங்களே அளிக்கப்பட்டுள்ளன.

| சட்டத் தொடர்பு | அதிகாரங்களும் கடமைகளும் |
| --- | --- |
| **190** ஆம் பிரிவு | மாநகர சபை நிதியத்தின் கணக்குகள் சார்ந்த பெறுகைகள் மற்றும் செலவுகள் பற்றிய கூற்றினை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கும் நியதிமுறையான பொறுப்பு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

DRAFT

| | |
|---|---|
| 317 (1) **ஆம் பிரிவு** | மாநகர சபை ஒவ்வோராண்டிலும் முன்னெடுத்துள்ள பணிகள் தொடர்பில் பொதுவான ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அவதானிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றைத் தயாரித்து மாநகர சபையின் நகர முதல்வரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். நகர முதல்வர் அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்து வரும் கூட்ட அமர்வில் சபை ஆவணப்படுத்தல் சட்ட ரீதியான தேவைப்பாடாகும். |
| 317(2)(1) **(அ) (ஆ) (இ) பிரிவு** | மேற்படி சபையொன்றினால் பயன்படுத்தப்படும் அல்லது அதனால் இருப்பாட்சி செய்யப்படும் அல்லது அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏதேனும் பொதுக் கட்டிடத்தை, அசைவற்ற ஆதனத்தை அல்லது நிறுவனத்தை அல்லது ஏதேனும் வேலையைப் பரிசோதித்தல், மாநகர சபையின் உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களை கேட்டுப் பரிசோதித்தல் மற்றும் அவசியமெனக் கருதும் தகவல்களை வழங்குமாறு மாநகர சபைக்கு பணித்தல். |

**இவற்றுக்கு மேலாக** உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு மத்திய அரசாங்கத்தின் **கீழுள்ள** அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பெரும்பாலும் உள்ளூராட்சி ஆணையாள**ருக்கு கிடைக்கின்றது**.

## 4.2. நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும்

| **சட்டத் தொடர்பு** | **அதிகாரங்களும் கடமைகளும்** |
|---|---|
| **27(3) ஆம் பிரிவு** | நகர சபையின் தவிசாளர், உப தவிசாளர் பதவிகள் இறப்பு அல்லது இராஜினாமா அல்லது பதவி நீக்கம் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் வெற்றிடமாயின், சபையின் செயலாளரை அப்பதவியின் பணிகளையும் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உண்டு. |
| **36 அ (4) உட் பிரிவு** | உள்ளூராட்சி அமைச்சரால் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரால் காலத்திற்குக் காலம் ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் நகர சபைக்கு, அதன் அலுவல்களைக் கொண்டுநடத்த வேண்டிய முறை பற்றி அல்லது அதன் தொழிலை ஆற்ற வேண்டிய முறைபற்றி பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகள் சபையால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும். |

DRAFT

| | |
|---|---|
| **39(2) உட் பிரிவு** | சபையின் செலவில் இடம்பெறும் ஒரு கடமை அல்லது வேலை தொடர்பான ஏதேனும் உடன்படிக்கை ஒன்று அங்கீகரிக்கப்படுவதை சபை தவிர்க்கும் பட்சத்தில் தவிசாளர் குறித்த உடன்படிக்கையில் இடம்பெறுவதற்கான அங்கீகாரத்தை வழங்க ஆணையாளருக்கு அதிகாரமுண்டு. |
| **174 அ பிரிவு** | நகர சபைக்கு உரிய ஏதேனும் பணியை நிறைவேற்றும் பொருட்டு கடன்பெறுவதற்கான அங்கீகாரத்தை வழங்குதல். |
| **176 (1) ஆம் பிரிவு** | நகரசபையால் பேணவேண்டிய கணக்குப் புத்தகங்களுக்கான மாதிரிகளை அறிமுகப்படுத்துவதற்கும் அந்த மாதிரிகளுக்கமைய கணக்குப் புத்தகங்களை பேண வேண்டுமெனவும் பணித்தல். |
| **177 (1) ஆம் பிரிவு** | ஆண்டிறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுவதற்கான அங்கீகாரத்தை வழங்கும் அதிகாரம். |
| **178(1) ஆம் பிரிவு** | வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கான மாதிரியைத் தீர்மானிக்கும் ஆணையாளரின் அதிகாரம். |
| **180(1) (2) ஆம் பிரிவு** | நகர சபையானது நிதியாண்டு முடிவுற்ற பின்னர் முடிந்தளவு விரைவாக உள்ளூராட்சி ஆணையாளரால் பணிக்கப்படும் விதத்திலான வடிவத்தில் வருடாந்த நிருவாக அறிக்கையைத் தயாரித்து சமர்ப்பித்தல். |
| **183(3), (5) ஆம் உட் பிரிவு** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி எவரேனும் நபர் தொடர்பில் மேலதிகக் கட்டணம் தொடர்பான அத்தாட்சிப்படுத்தலைச் செய்த பின்னர அதற்கு எதிரான மேன்முறையீடுகள் மற்றும் குறித்த மிகைக் கட்டணத்தை பயனுறச் செய்தல் மற்றும் அறிவிட அவசியமான நடவடிக்கைகள். |
| **184(1) (இ) பிரிவு** | விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்புரைகள், ஆலோசனைகள் அல்லது சிபாரிசுகளுக்கு தவிசாளர் அல்லது சபை அல்லது நகர சபையொன்றின் ஓர் உறுப்பினர் தொடர்ச்சியாக கீழ்ப்படியாமை இல்லாவிடின், அந்தப் பணிப்புரைகள் அல்லது ஆலோசனை அல்லது சிபாரிசுகளைப் புறக்கணித்தல் தொடர்பில் போதுமானளவு எண்பிப்பு இருக்கின்றது என அமைச்சருக்கு தெரியும் வேளையில் தவிசாளரை அல்லது உறுப்பினர் ஒருவரை பதவி நீக்கம் செய்தவதற்கு மற்றும் நகர சபையை கலைத்துவிடுவதற்கு அவசிய நடவடிக்கை |

DRAFT

எடுக்கும் அதிகாரங்கள்.

**191(2) ஆம் பிரிவு**

188 ஆம் பிரிவின் கீழ் செலவு செய்யும் நிதியை பெற்றுக் கொள்வதற்கு உள்ளூர்க் கடன் மற்றும் அபிவிருத்தி ஆணையாளருக்கு கடன் வழங்குவதற்கு பொறுப்பாக ஏதேனும் வீத வரியை பிணை/ஈடு வைக்கும் அதிகாரம்.

**195 ஆம் பிரிவு**

ஏதேனும் நகர சபையின் நிருவாகம் செய்யப்படும் ஒரு நகரில் பொது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான கொள்கைகளை இணைப்பாக்கம் செய்யும் அதிகாரம்.

**196 (அ) (ஆ) (இ)**

- நகர சபையால் அல்லது அதன் நிருவாகத்தால் பயன்படுத்தப்படும் அல்லது அதனால் இருப்பாட்சி செய்யப்படும் அல்லது அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏதேனும் பொதுக் கட்டிடத்தை, அசைவற்ற ஆதனத்தை அல்லது நிறுவனத்தை அல்லது நகர சபையின் பணிப்பின் கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனும் வேலையைப் பரிசோதிக்க அதிகாரம்.

- நகர சபையின் உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களை கேட்டுப் பரிசோதிக்கும் அதிகாரம.

    - சபையினுடைய அல்லது அதன் ஏதேனும் குழுவினுடைய **நடவடிக்கைகள் அல்லது கடமைகள்** தொடர்பான கூற்றுக்கள், கணக்குகள், அறிக்கைகள் அல்லது ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றைக் கொடுத்துதவுமாறு ஏதேனும் **நகர** சபையைத் தேவைப்படுத்தலாம்.

**197 ஆம் பிரிவு**

உள்ளூராட்சி ஆணையாளருக்கு அல்லது விடயத்திற்கு ஏற்றவாறு அதிகாரம் பெற்றுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு நகர சபையின் தவிசாளரைக் கேட்டறிந்த பின்னர் நகர சபை நிருவாகத்தின் கீழுள்ள நகரினுள் தத்தமது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்ற நகர சபை அலுவலர்களுக்கு உள்ளவாறே சோதனையிடும் தத்துவமும் அதிகாரமும் உண்டு.

**198 ஆம் பிரிவு**

நகர சபையின் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடு தொடர்பில் வருடாந்த **கணிப்பீட்டை** மேற்கொண்டு, அதில் அவதானிக்கப்பட்ட தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றைத் தயாரித்து சபைக்கு **சமர்ப்பிக்கும் பொருட்டு** நகர சபையின்

DRAFT

| | |
|---|---|
| | தவிசாளரிடம் ஒப்படைக்கும் அதிகாரம். |
| **199 ஆம் பிரிவு** | நகர சபையின் வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் அதில் செய்யப்படுகின்ற ஏதேனும் மாற்றங்கள் அல்லது அதனுடன் தொடர்புடைய சகல அறிக்கைகள் அல்லது விவரத் திரட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம். |
| **201 ஆம் பிரிவு** | நகர சபையின் நடவடிக்கைகளை மீளாய்வு செய்து வருடாந்த நிருவாக அறிக்கையைத் தயாரித்து வெளியிடும் பணி ஆணையாளருக்கு உரியதாகும். அவ்வாறான அறிக்கை ஒவ்வொன்றையும் மீளாய்வுகளையும் பாராளுமன்றத்திற்கு (தற்போது மாகாண சபைகள்) சமர்ப்பித்தல் வேண்டும். |
| **202 ஆம் பிரிவு** | பிணக்குகளைத் தீர்க்கும் அதிகாரம் - இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட நகர சபைகள் அல்லது வேறு ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றுக்கிடையில் ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்காக யாராவது ஒரு பகுதியினரால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப் படுமிடத்து அமச்சரால் அவை. உள்ளூராட்சி ஆணையாளருக்கு விடப்படும்போது உள்ளூராட்சி ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாகும். |
| **204 ஆம் பிரிவு** | உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் கொண்டுள்ள அதிகாரங்களை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதன் ஊடாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு சுமத்தும் அதிகாரம். |
| **241 ஆம் பிரிவு** | நகர சபையினால் பிரேரணை மூலம் செய்யப்பட்ட தீர்மானத்தின்படி பணியாளர் சம்பளம், ஓய்வூதியம் தொடர்பில் திருப்திப்படாத எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர்களால் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகளைப் பொறுப்பேற்கும் அதிகாரம். அது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரால் விடப்படும் கட்டளை நகர சபையால் எடுக்கப்பட்ட முடிவாக இருக்கும். |

### 4.3 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சசைபகள் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புக்களும்

| சட்டத் தொடர்பு | அதிகாரங்களும் கடமைகளும் |
|---|---|
| **19(1) (1)** | பிரதேச சபை அவசியமெனக் கருதும் எல்லாப் பதவிகளையும் அல்லது |

DRAFT

| | |
|---|---|
| **ஆம் பிரிவு** | உத்தியோகங்களையும் உருவாக்க சபையால் தீர்மானிக்கப்படும்போது அதற்கென உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறவேண்டும். |
| **19(3) ஆம் பிரிவு** | ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் பிரதேச சபைக்கு, அதன் அலுவல்களைக் கொண்டுநடத்த வேண்டிய முறை பற்றி அல்லது அதன் தொழிலை ஆற்ற வேண்டிய முறைபற்றி பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகள் சபையால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும். |
| **19(4) ஆம் பிரிவு** | அமைச்சர் அல்லது ஆணையாளர் காலத்துக்குக் காலம் அத்தகைய பொறுப்பு முயற்சியின் தொழில் தொடர்பில், அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான விவரத் திரட்டுகளையும் கணக்குகளையும் ஏனைய தகவல்களையும் தமக்கு எழுத்தில் தருமாறு சபையைப் பணிக்கலாம் என்பதுடன் அச்சபை அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றையும் நிறைவேற்றுதலும் வேண்டும். |
| **124 ஆம் பிரிவு** | பிரதேச சபைக்குத் தொடர்புடையதாக இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் எல்லா துணைவிதிகளின் பிரதிகளையும் பெற்றுக்கொள்ளுதல். |
| **172(8) ஆம் பிரிவு** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி எவரேனும் நபர் தொடர்பில் மேலதிகக் கட்டணம் தொடர்பான அத்தாட்சிப்படுத்தலைச் செய்த பின்னர் அதுபற்றிய மேன்முறையீடு செய்யப்படாதிருப்பின் பதினான்கு நாட்களுக்குள் அத்தொகையை உள்ளூராட்சி ஆணையாளருக்கு செலுத்துதல் வேண்டும். |
| **172 (9) (10) ஆம் பிரிவு** | ஒரு நபர் செலுத்த வேண்டிய மேலதிகக் கட்டணத்தை உள்ளூராட்சி ஆணையாளரிடம் செலுத்தாவிட்டால், அந்த விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று குறித்த தொகையை ஒரு குற்றப் பணமாக அறவிட்டுக்கொள்ளுதல் ஆணையாளரின் பொறுப்பாகும். |
| **172 (11) ஆம் பிரிவு** | அமைச்சின் செயலாளரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை மூலம் எவரேனும் நபரிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென பணிக்கப்பட்ட தொகை எதுவும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பணத்தொகை எதுவும் இருப்பின் உள்ளூராட்சி |

DRAFT

ஆணையாளர் உடனடியாக அதே முறையில் அறிவிடலாம்.

| | |
|---|---|
| **175(1) (2) ஆம் பிரிவு** | பிரதேச சபையொன்றினது தீர்மானமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவின விடயத்தின் சட்டப்படியான தன்மை பற்றிய உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்புரைகளை உதவி ஆணையாளர் ஊடாக சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்திடம் தெரிவித்தல். |
| **181 ஆம் பிரிவு** | சபைக்கு அவசியமெனக் கருதும் ஏதேனும் வேலையை நிறைவேற்றுதல் அல்லது ஏதேனும் கடமையை நிறைவேற்றுவதற்கான கடன்கள் திரட்டுவதை சபை அனுமதிக்கத் தவறும் சந்தர்ப்பங்களில் கடன் விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் அதிகாரம். |
| **191(1) ஆம் பிரிவு** | உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி ஆணையாளரால் பிரதேச சபைக்கு அவசியமாதெனக் கருதும் கடன் தொகையை உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கலாம். |
| **191(2) ஆம் பிரிவு** | ஏதேனும் வீதவரியின் அல்லது வரியின் பிணைப் பொறுப்பின் மீது கடன்தொகையை வழங்கும் அதிகாரம். |
| **193 ஆம் பிரிவு** | பிரதேச சபைச் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியை உதவி ஆணையாளருக்கு உரித்தாக்கும் அதிகாரம். |
| **195 ஆம் பிரிவு** | பொதுச் சுகாதாரம் அல்லது பாதுகாப்பு நலன் கருதி சிபாரிசுகளை முன்வைப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு. |
| **196 (1) (அ) பிரிவு** | பிரதேச சபையொன்றினால் பயன்படுத்தப்படும் அல்லது அதனால் இருப்பாட்சி செய்யப்படும் அல்லது அதன் கட்டுப்பாட்டில் இருக்கும் ஏதேனும் பொதுக் கட்டிடத்தை, அசைவற்ற ஆதனத்தை அல்லது நிறுவனத்தை அல்லது பிரதேச சபையின் பணிப்பின் கீழ் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏதேனும் வேலையைப் பரிசோதிக்க அதிகாரம் உண்டு. |
| **196 (1) (ஆ) பிரிவு** | பிரதேச சபையின் உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் புத்தகங்களை அல்லது ஆவணங்களை கேட்டுப் பரிசோதிக்கும் அல்லது பொறுப்பேற்கும் அதிகாரம். |

| | |
|---|---|
| **196 (1) (இ) பிரிவு** | பிரதேச சபையின் ஏதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைப் பொறுப்பில் வைத்திருக்கும் அல்லது அதன் மீது ஆதிக்கம் கொண்டிருக்கும் எவரேனும் ஆளை, அத்தகைய பணத்தை அல்லது ஆதனத்தை பரிசோதனைக்காக அல்லது சரி பார்த்தலுக்காக சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தலும். |
| **196 (1) (ஈ) பிரிவு** | பிரதேச சபையின் நிருவாகம் சம்பந்தமாக அல்லது இச்சட்டத்தின கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் பிரதேச சபையினால் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல், கடமைகளும் புரியப்படுதல் சம்பந்தமாக ஏதேனும் கருமத்தைப் பற்றி விசாரணை செய்யலாம். |
| **196 (1) (உ) பிரிவு** | பிரதேச சபை அல்லது அதற்கான ஏதேனும் குழு தொடர்பான கூற்றுக்கள், கணக்குகள், அறிக்கைகள் அல்லது ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றைக் கொடுத்துதவுமாறு ஏதேனும் பிரதேச சபையைத் தேவைப்படுத்தலாம். |
| **197 ஆம் பிரிவு** | உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலம் தத்துவங்களைப் பிரயோகித்தல். |

**4.4 2012ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் கடமைகள்**

மேற்படி சட்டத்தின் 66 இ (1) மற்றும் (2) பிரிவுகளின்படி ஆணையாளர் பின்வரும் பணிகளை நிறைவேற்ற வேண்டும். " அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக்குழுவொன்று ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனத்தின் மொத்த ஆசனங்களின் எண்ணிக்கையில் 50% இற்கும் குறைவான ஆசனங்களைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தின் நகர முதல்வர் அல்லது தவிசாளரை தெரிவு செய்யும் பொறுப்பு."

## 05. உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அதிகாரங்களும் பொறுப்புகளும்

உள்ளூராட்சி கட்டளைச் சட்டங்களின்படி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் தொடர்பான அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன.

**1.1 255 ஆம் அத்தியாயமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்**

DRAFT

பின்வரும் சந்தர்ப்பங்களில் நகர சபை தொடர்பான கருமங்களை நிறைவேற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன.

| சட்டத் தொடர்பு | அதிகாரங்களும் கடமைகளும் |
|---|---|
| **184(1), (1ஆ) (i)** மற்றும் **(iii)** உட்பிரிவு | நகர சபையொன்றில் தவிசாளர் பதவி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அக்கருமங்களை நிறைவேற்ற உப தவிசாளர் ஒருவரும் இல்லாதவிடத்து (உப தவிசாளர் பதவியும் நிறுத்தப்பட்டுள்ள அல்லது வெற்றிடமாக இருத்தல்) விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் பணிப்பின் பேரில் நகரசபைத் தவிசாளரின் பணிகளை நிறைவேற்றுதல்.<br><br>நகர சபை கலைக்கப்பட்டுள்ள அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அமைச்சரின் பணிப்பின் பேரில் நகர சபை தவிசாளரின் பணிகளை நிறைவேற்றுதல். |

## 1.2 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் பொறுப்புகளும்

| சட்டத் தொடர்பு | அதிகாரங்களும் கடமைகளும் |
|---|---|
| **11(4) ஆம் பிரிவு** | ஏதேனும் பிரதேச சபையின் தவிசாளர் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்படுத்துகையைப் பெற்றதிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாகச் சிறப்புக் கூட்டமொன்றை கூட்ட மறுத்தால் அல்லது வேண்டுமென்று அசட்டை செய்தால், அதன் பின் எந்நேரத்திலும் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுவது உதவி ஆணையாளருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும் என்பதுடன் அக்கூட்டத்தில் அவர் தலைமை தாங்குதலும் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரை தலைமை **தாங்கப்** பிரதியீடு செய்வதும் அவருக்கு சட்டபூர்வமானதாதல் வேண்டும். |
| **133 ஆம் பிரிவு** | பிரதேச சபை நிதியத்திலிருந்து பணங்கள் கொடுக்கப்படுவதற்கான எல்லா கட்டளைகளும் அல்லது காசோலைகளும் உதவி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அமைவாக அந்நோக்கத்திற்கென பிரதேச சபையால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட இரண்டு அலுவலர்களினால் கையொப்படமிடுதல் வேண்டும். |
| **134 (1) ஆம்** | பிரதேச சபையின் நிருவாக ஆளுகையினுள் அமைந்துள்ள வீதவரிக்குள் விதிக்கப்படாத பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட அபிவிருத்தி |

DRAFT

**பிரிவு** அடைந்த பிரதேசங்களை இனங்கண்டு, அதனை அபிவிருத்தியடைந்த பிரதேசமாக அங்கீகரித்து, வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடும் சட்டபூர்வமான அதிகாரமும் பொறுப்பும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரியதாகும்.

**140(1) ஆம் பிரிவு** புதிய வரி மதிப்பீடு ஒன்றைத் தயாரிப்பதற்காக ஏதேனும் பிரதேச சபை எல்லையினுள் உள்ள வீடு, கட்டிடம், காணி அத்துடன் சிறுமனை என்பன ஒவ்வொன்றினதும் ஆண்டுப் பெறுமானம் பிரதான விலை மதிப்பீட்டாளரால் அல்லது உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் பிரதேச சபையால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் விலை மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**148(6)** பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் ஏதேனும் வரிக்குட்பட்டதான ஏதேனும் வாகனம் (துவிச்சக்கர வண்டி / மாட்டு வண்டி / தள்ளு வண்டி / றிக்சோ) அல்லது விலங்கு (குதிரை / மட்டக் குதிரை / கோவேறு கழுதை / யானை) அல்லது விலங்கு, ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சபை எல்லைகளுக்குள் பயன்படுத்தப்படுகின்றவிடத்து அத்தகைய வாகனம் அல்லது விலங்கு எந்த பிரதேச சபை எல்லையினுள் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றதோ அல்லது பயன்படுத்தப்பட முன்னப்படுகின்றதோ **அந்த பிரதேச சபை எல்லைகள் தொடர்பிலான அத்தகைய ஒரு வரிக்கு மாத்திரமே உட்பட்டாதல் வேண்டுமென்பதுடன்**, அந்த எல்லைக்குள் அத்தகைய ஏதேனும் வரிக்குட்பட்டதான **ஏதேனும்** வாகனம் அல்லது விலங்கு பிரதானமாக பயன்படுத்தப்படுகின்றதோ அல்லது பயன்படுத்தப்பட முன்னப்படுகின்றதோ, அந்த எல்லை பற்றிய பிரச்சினை எதுவும் எழுமாயின் பிரச்சினையானது உதவி ஆணையாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

**171 (அ) (ஆ) பிரிவு** பிரதேச சபையொன்றின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் **முறை பற்றிய** பொறுப்பு.

**175 (1) ஆம் பிரிவு** பிரதேச சபையொன்றினது தீர்மானம் ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவின விடயத்தின் சட்டப்படியான தன்மை பற்றிய எவையேனும் ஐயுறவுகளைத் தீர்த்து வைக்கும் நோக்கத்துக்காக, பிரதேச சபை தவிசாளரின் முடிபுக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு உதவி ஆணையாளர் மூலம் அவ்விடயத்தை ஆற்றுப்படுத்தலாம்.

**185 (3)** தவிசாளர் மற்றும் உப தவிசாளர் பதவிகள் இடைநிறுத்தப்பெற்றுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் அமைச்சரின் பணிப்பின் பேரில் தவிசாளரின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றும் அதிகாரம்.

**193** உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும்

DRAFT

ஆம் பிரிவு தத்துவம், கடமை அல்லது பணி ஆணையாளரால் பொதுவாக அல்லது சிறப்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உதவி ஆணையாளரி**னால் ஆணையாளரின்** பணிப்புரைக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய அத்தகைய எழுத்திலான அதிகாரத்தினால் குறித்துரைக்கப்பட்டக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கும் அத்தகைய அளவுக்கும் **நிறைவேற்றும் அதிகாரம்**.

DRAFT